**மாதிரி வினாத்தாள் - 2016-17**

**MODEL QUESTION PAPER -2016-17**

**பன்னிரண்டாம் வகுப்பு** **மொத்த மதிப்பெண்கள் :100**

**[ XII –STD ]** **Maximum marks: 100**

**தமிழ்** **கால அளவு;3 மணி**

**TAMIL** **Time Allowed: 3 hours**

……………………………………………………………………………………………

**பகுதி –அ (section:A )** **( 50 மதிப்பெண்கள் )**

**( 50 marks)**

**1.(அ) கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.** **5** x 1=5

I. பூப்பது மரந்தன பூக்கள்;புன்னகை மறந்தன இதல்கள்
II. கல்லியில் முல் தைத்ததும் பால் ஒழுகும்
III. ஆலயம் தொலுவது சாலவும் நண்று.
IV. வெல்லிப் பனி மலையின் மீதுளாவுவோம் என்றார் பாரதி.
V. மாடு இலைத்தாலும் கொம்பு இளைக்காது என்பது பலமொழி.
VI. பிடிவாதம் பிடித்தவண் தாண் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்பான்.
VII. வளையில் மாட்டிய வாலைமீன் தப்பியது

**ஆ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களை வல்லின மெய்யிட்டுத் திருத்துக** . **5 x1=5**

I. மழையின்றி பயிர் வாடியது;மக்கள் பணமின்றி தவித்தனர்.
II. பறவா பறவை காணா கண்கள் ஓடா குதிரை கண்டதுண்டா?.
III. ஆடி திங்கள் தேடி பார்த்து விதை விதைத்தனர்
IV. பருத்தி காய் பறிக்க விடியற்காலை புறப்பட்டு சென்றான்.
V. நீல திரை கடல் ஓரத்தில் நித்தம் தவம்செய் குமரி எல்லை.
VI. எப்படி செய்தாலும் இப்படிசெய் என்று செப்பியபடி இருக்கிறான்,.
VII. நம்மை பார்த்து உலகம் நல்லதை கற்று கொள்ள வேண்டும்

**இ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக..** **5 x1=5**

I. கரிகாலன் காவிரியின் குறுக்கே கல்லணையைக் கட்டுவித்தான் [தன் வினையாக மாற்றுக]

II. நம்பியாண்டார் நம்பி தேவாரப்பதிகங்களைத் தொகுத்தார் [ பிறவினையாக மாற்றுக ]

III. ஒழுக்கம் மிக்க மனிதர்கள் அனைவராலும் பாராட்டப்படுவர். [செய்வினைவாக்கியமாக மாற்றுக ]

IV. வள்ளலார் வாடிய பயிரைக் கண்டு வாடினார். [பொருள் மாறாமல் எதிர்மறையாக்குக]

V. நாடு முன்னேற வேண்டும்; நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் .[கலவை வாக்கியமாக மாற்று]

VI. ஆசிரியர் மாணவனிடம் ,"நாளை நீ மீண்டும் வா உனக்குப் பாடம் நடத்துகிறேன்" என்றார். [அயற்கூற்றாக்குக]

VII. பனிக்கூழை விரும்பாத குழந்தைகள் இல்லை[ பொருள் மாறாமல் உடன்பாட்டுத் தொடராக்குக]

**2 (அ ) .பின்வரும் பத்தியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.** **5 x 2 = 10**

**சி**னிமாவில் மட்டுமல்ல, நிஜத்திலும் **கலைவாணர்** எப்போதுமே சிரித்த முகமாக இருப்பார் . சிரிக்கச் சிரிக்கப் பேசுவார் . வாய்விட்டுச் சிரிக்க வைத்ததோடு , மனம் தொட்டுச் சிந்திக்கவும் வைத்த மேதை அவர். கணக்கில்லாமல் சம்பாதித்ததைப் போலவே , துன்பப்படுகிறவர்களுக்கு கணக்குப் பார்க்காமல் அள்ளித் தந்த வள்ளல்.
.

பெரிய பங்களா, ஆறேழு கார்கள், ஏராள சொத்துகள் என்று செழிப்பாக வாழ்ந்தாலும், வருகிறவர்களுக்கெல்லாம் வாரிக் கொடுத்தே கடைசி நாட்களில் பெரும் துன்பத்திற்கு ஆளானது அவர் குடும்பம் . ஒரு நாள், வீட்டு மாடியில் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார் அப்போது அவர் மனைவி மதுரம் மாடிக்கு வந்து , 'நம்ம காரை ஏலம் போடுவதற்காக வந்திருக்கிறார்கள் ' என்றார் கவலையுடன் . இதைக் கேட்டவுடன் கலைவாணர் வாய்விட்டுச் சிரித்தார் . நண்பர்களோ, 'இந்தத் துன்பத்திலும் இவர் இப்படிச் சிரிக்கிறாரே ' என்று வேதனைப்பட... மதுரம், அம்மாவைப் பார்த்து , 'நீ அன்னிக்கு என்ன சொன்னே? உங்க காரை ஒரு மனுசனும் வாங்க மாட்டான்னு சொன்னியே, இப்பப் பார்த்தியா , அந்தக் காரை ஏலத்துல எடுக்க எத்தனை பேர் வந்திருக்கிறாங்கன்னு ' என்று சொல்லி மீண்டும் சிரித்தார்.

அந்தக் காலகட்டத்தில் ஒருமுறை , , 'மதுரம்...உனக்காக நிறைய வெச்சுட்டுப் போறேன்' என்று கலைவாணர் சொன்னார். அதைக் கேட்ட மதுரம் 'சொத்துபத்து ஒண்ணும் இல்லாதப்போ , இப்படி சொல்றாரே '

என்று யோசிக்க, ‘நிறைய கடன்களை வெச்சுட்டுப் போறேனே , அதைச் சொன்னேன்’ என்று அப்போதும் குறையாத சிரிப்போடு சொல்ல ... கலங்கிப் போனார் மதுரம்.

உடல்நலம் குன்றி மருத்துவமனையில் கலைவாணர் இருந்த வாழ்நாளின் கடைசி நாட்களில்கூட தனது வள்ளல் தன்மையையும் வாயாரச் சிரிக்க வைப்பதையும் கைவிடாமலே இருந்தார் . நலம் விசாரிக்க வந்த அறிஞர் அண்ணா , ‘டாக்டர் என்ன சொன்னார் ?’ என்று கேட்க, ‘டாக்டர் வந்தார் , கையைப் பிடித்துப் பார்த்தார் , கைவிட்டுவிட்டார்’ என்றார் அப்பா . இதைக் கேட்டு அண்ணா பதற , அப்பாவோ, ‘பதற்றப்படாதீங்க, பிடித்த கையை விட்டுவிட்டார்னு சொன்னேன்’ என்று சிரித்தார்.

.

I. கலைவாணர் பண்பு குறித்து எழுதுக.
II. எதைக் கேட்டு கலைவாணர் வாய்விட்டு சிரித்தார்?
III. எதை நிறைய வைச்சுட்டுப் போறேன் என்று **கலைவாணர்** கூறினார்?
IV. வாழ்நாளின் கடைசி நாட்களில்கூட வாயார சிரிக்க வைத்தார்- விளக்குக.
V. இப்பத்தியிலிருந்து நீ அறிந்ததை எழுதுக.

**(ஆ ). பெருநகரங்களில் காற்று மாசடைவது குறித்து மாசு கட்டுப்பாட்டு ஆணையரை நேர்காணல் செய்க**. 5

**[ அல்லது ]**

**பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி. 5**

தப்பாமல் கல்வியை ஓது-கல்வி
தரும் புகழ்க் கீடிந்த உலகினில் ஏது?
மப்பில்லா வானம் போல் ஆகும்-கல்வி
வளமில்லா வாழ்க்கையில் பயனற்றுப் போகும்
அன்போடு கணக்காயர் போற்று-பள்ளி
அறிவுரை வாழ்க்கையில் இருளுக்கு மாற்று
கல்லாத மக்களால் வருவதே தீமை
பெற்றவர் காதுக்குத் தேனாம்-பிள்ளை
பேச்சாளி அறிவாளி என்பதுதானாம்

1. கல்வி வளமில்லா வாழ்க்கை எதைப் பொன்றது?
2. வாழ்க்கையின் இருளுக்கு மாற்று எது?
3. அறிவின்மை எதனால் நீங்கும்?

4. தீமை யாரால் நீங்கும் ?
5. பெற்றவர் காதுக்குத் தேன் எது?

3 . <u>கீழ்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக.</u> 10

1. தண்ணீர் மேலாண்மை
2. என் இனிய தாய்மொழி
3. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய்

4. <u>பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக.</u> 10

1 .சாலைகளைச் சீர் செய்ய வேண்டி கடிதம்.
2. தேர்வுக்கு ஆயத்தப் படுத்தல் பற்றி நண்பனுக்குக் கடிதம்.

[எக்கடிதமாயினும் உம் முகவரி ப.பாரி / ப.பாவை, 10.பறம்பு நகர், பரமக்குடி எனக் கொள்க ]

**<u>பகுதி –ஆ</u>** **<u>( 50 மதிப்பெண்கள் )</u>**
**<u>(section:B )</u>** **<u>( 50 marks)</u>**

5 **<u>.கீழ்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி</u>** 2×10=20

I. கவிதை இயல்பாக மேலை நாட்டார் கூறுவனவும் வையாபுரியார் மறுப்பும் குறித்தும் எழுதுக.
II. தமிழ் மாந்தரின் ஒற்றுமையும் ஈகையும் குறித்துக் கட்டுரை எழுதுக.
III. இயல் இசை நாடகம் எனும் முத்தமிழ் வகைமை குறித்து எழுதுக.
IV. நீதி கூறும் போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதை விளக்குக.

6. **<u>கீழ்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி.</u>** 2×5= 10

i. வேலன் அன்னத்திடம் கூறிய எழுச்சியுரைகள் யாவை?
ii. கம்பர் கூறும் இறைவனின் இயல்புகள் யாவை ?

iii. ஈதொன்று என்பதன் பல்வேறு பொருள்கள் யாவை?

iv. .சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகள் யாவை?

**<u>7 . கீழ்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.</u>** **5**

"தையலை நோக்கிய தலையன்; கையினன்
வையகம் தழீஇநெடி திறைஞ்சி வாழ்த்தினான்"

i. . இவ்வரிகள் இடம் பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்? 1

ii. இவ்வரிகள் யார் கூற்று? 1

iii. தலையன் யார்? 1

iv. தையல் என்று கூறப்பட்டவர் யார்? 1

v. யாரை வாழ்த்தினான்? 1

**8.** 'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து' சிறுகதையை அதன் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. 10

அல்லது

'மகன்' சிறுகதையை அதன் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**9** . பூந்தோட்டச் சாமியார் **-** இக்கதைமாந்தரைப் பற்றி திறனாய்வு செய்க. **5**

அல்லது

மாலதி -- இக்கதைமாந்தரைப் பற்றி திறனாய்வு செய்க.